**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண். 110/2025 -ல்**

**அசல் வழக்கு எண். 132/2019**

**செல்வக்குமார்** ..... மனுதாரர்/பிரதிவாதி

**// எதிர்//**

முத்துக்குமார் ..... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராதா, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவில் வாதி தரப்பு சாட்சியான P.W.1 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். மனுதாரருக்கு எதிராக எதிர்மனுதாரர்/வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வாதி தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. வாதி தரப்பு சாட்சியான P.W.1 ஐ குறுக்கு விசாரணை செய்யும்போது வாதி தரப்பு ஆவணங்கள் சம்மந்தமாக

முக்கிய வினாக்களை கேட்காமல் விடுப்பட்டு போய் உள்ளது. மேற்படி ஆவணங்கள் குறித்த வினாக்கள் மனுதாரர் கட்சிக்கு மிக முக்கியமாகவும், அவசியமாகவும் உள்ளது. ஆகவே வாதி தரப்பு சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள P.W.1 ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லாதபட்சத்தில் மனுதாரருக்கு அளவிட முடியாத இன்னலும், இழப்பும் ஏற்பட்டுவிடும், மனுதாரர் தரப்பில் நல்ல கட்சியுள்ளது. ஆகவே வாதி தரப்பு சாட்சியான P.W.1 ஐ மீண்டும் அழைத்து விசாரித்துக்கொள்ள உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>** :-

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படிக்கும், உண்மை நிலவரப்படிக்கும் நிலை நிற்க கூடியதல்ல. இதனடியில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டியுள்ளது. அதனை இந்த எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார்.

மேற்படி அசல் வழக்கானது வாதியால் இந்த பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு வாதி தரப்பு விசாரணை முழுவதுமாக நடத்தி முடிக்கப்பட்டு அதன் பிறகு பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் தற்பொழுது அசல் வழக்கில் பிரதிவாதிக்கு யாதொரு கட்சியும் இல்லை என்ற நிலையில் வாதியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று கூறி மனு அளித்திருப்பது எவ்விதத்திலும் ஏற்புடையதல்ல.

மேற்படி வாதி தரப்பில் விசாரணை முடிக்கப்பட்ட நிலையில் பிரதிவாதிக்கு அசல் வழக்கில் யாதொரு கட்சியும் இல்லை என்று அறிந்துகொண்டதன்

காரணத்தினால் வழக்கினை காலதாமதப்படுத்தி எதிர்மனுதாரர்/வாதிக்கு யாதொரு நீதியின் பலனும் கிடைத்து விடக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் இதுபோன்ற மனுவினை அளித்துள்ளார்.

மனுதாரர் வழக்கினை காலதாமதப்படுத்தும் நோக்கிலும், வழக்கினை இழுத்தடித்து எதிர்மனுதாரருக்கு கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்திலும் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டு விசாரணை முடிக்கப்பட்ட நிலையில் வாதியை மீண்டும் அழைத்து விசாரணை செய்வது என்பது வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்திற்காகவும் வழக்கின் தன்மையை திசை திருப்பும் நோக்கத்தில் இதுபோன்ற மனுக்களை தாக்கல் செய்து மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அலைச்சலையும், வீண் கஷ்ட நஷ்டங்களையும் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். ஆகவே மனுதாரர் கோரியுள்ள இடைநிலை மனுவினை எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

**5) <u>தீர்வு</u>:-**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, நிரூபண வாக்குமூலம், ஆட்சேபணை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

3. மனுவினை பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்து, எழுவினாக்கள் வனைந்து, வாதி தரப்பு விசாரணை முழுவதுமாக நடத்தி முடிக்கப்பட்டு அதன் பிறகு பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரிய வருகிறது.

4. வாதி தரப்பு சாட்சியான P.W.1 ஐ குறுக்கு விசாரணை செய்யும்போது வாதி தரப்பு ஆவணங்கள் சம்மந்தமாக முக்கிய வினாக்களை கேட்காமல் விடுப்பட்டு போய் உள்ளது. மேற்படி ஆவணங்கள் குறித்த வினாக்கள் மனுதாரர் கட்சிக்கு மிக முக்கியமாகவும், அவசியமாகவும் இருப்பதால் வாதி தரப்பு சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள P.W.1 ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க கோரியுள்ள இம்மனுவிற்கு எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டிருந்தாலும், மனுதாரர்/பிரதிவாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதாலும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலம், வழக்கின் நிலை ஆகியவற்றினை கருத்திற்கொண்டும் நிபந்தனையுடன் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

5. மனுதாரர்கள் வருகின்ற 27.06.2025 அன்று எதிர்மனுதாரருக்கு ரூ.500/- செலுத்தி வைக்க வேண்டும் என்றும், இம்மனு அனுமதிக்கப்பட்டதிலிருந்து 15 தினங்களுக்குள்ளாக எவ்வித காலதாமதமுமின்றி வழக்கை மீண்டும் திறந்து

(P.W.1 Recall) செய்து மனுதாரர் தரப்பில் தொடர் குறுக்கு விசாரணை செய்து முடிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

6) **முடிவில்,** மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையாக ரூ.500/-ஐ மனு அனுமதிக்கப்பட்டதிலிருந்து 15 தினங்களுக்குள்ளாக (27.06.2025)ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. இம்மனுவினை மீண்டும் அழைக்க 27.06.2025.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்து-தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (20.06.2025 ) அவையறியப் பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN
Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.06.23 10:41:33 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**<u>குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

**இருதரப்பிலும்** : இல்லை

NATARAJAN AZHAGESAN
Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.06.23 10:41:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண். 110/2025 -ல்**

**அசல் வழக்கு எண். 132/2019**

திரு.செல்வக்குமார், த/பெ.லேட்.கணேசன், இந்து, வசிப்பிடம் அண்ணாநகர், 53 நெம்மேலி கிராமம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா.

.... மனுதாரர்/பிரதிவாதி

// எதிர்//

திரு.முத்துக்குமார், வயது 50, த/பெ.சிதம்பரம், இந்து, வசிப்பிடம் அண்ணாநகர், 53 நெம்மேலி கிராமம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா.

.... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவில் வாதி தரப்பு சாட்சியான P.W.1 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 17.02.2025

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 18.02.2025

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராதா, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையாக ரூ.500/- ஐ மனு அனுமதிக்கப்பட்டதிலிருந்து 15 தினங்களுக்குள்ளாக (27.06.2025)ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

02. இம்மனுவினை மீண்டும் அழைக்க 27.06.2025.

2025ம் ஆண்டு ஜுன் மாதம் 20-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

NATARAJAN AZHAGESAN
Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.06.23 10:41:52 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.